### எட்டையபுரத்திலுள்ள பாரதியாரின் வீடு

* 498 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் வாழ்ந்த அவருடைய எட்டையபுரம் வீடு தேசிய நினைவுச் சின்னமாக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) பாரதியார் வாழ்ந்த விட்டைத் தமிழ்நாடு நிலவுடைமைச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மூன்று, நான்கு ஆண்டுகளாக முயற்சி நடந்து வருகிறது. எந்த அளவில் அந்த நடவடிக்கை இருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பாரதியார் வாழ்ந்த வீட்டையே வாங்கலாமா என்று பார்த்தோம். அதில் பல தகராறுகள் ஏற்பட்டன. விலை மிக அதிகமாகச் சொன்னார்கள். பல சங்கடங்கள் உள்ளன. அக்விசிஷன் செய்யலாம் என்று 29—5—1971-ல் 4(1) நோட்டிஃபிகேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் விரிவாக எடுக்கப்படும்.

### திரைப்பட அரங்குகள் நடத்த உள்ளாட்சி மன்றங்களுக்கு உரிமங்கள்

* 499 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உள்ளாட்சி மன்றங்கள் (முனிசிபாலிட்டி) சினிமாக் கொட்டகைகள் நடத்த அனுமதி வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

### கல்லூரிகளில் காலி இடங்கள்

* 500 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகளில் இடம் காலியாக இருப்பது குறித்து வானொலி மூலம் விளம்பரம் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஒவ்வொரு கல்வியாண்டு தொடக்கத்திலும் அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள இடங்கள் பற்றி மாணவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது. அனைத்து இந்திய வானொலி மூலம் இத் தகவலைத் தெரிவிக்க முடியுமா என்பது குறித்து வானொலி நிலைய அதிகாரிகளுடன் கலந்து பரிசீலிக்கப்படும்.